## தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை நிலையாக இருக்கும்

வேளாண் அமைச்சகத்தின் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி 2015 -16 ஆம் ஆண்டில் இந்தியாவில் தேங்காய் 1.97 மில்லியன் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுவதன் மூலம் 140.55 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகிறது என கணித்துள்ளது. நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு 50 சதவிகிதம் பங்களிக்கின்றது. இதனை தொடர்ந்து கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேசம் போன்ற மாநிலங்கள் தேங்காய் உற்பத்தியில் பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களில் கோயம்புத்தூர் முதலிடம் வகிக்கின்றது. தொடர்ந்து திருப்பூர், தஞ்சாவூர்,திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி இடம் பெறுகின்றன.

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் வேளாண் துறை (USDA) யின் படி, 2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் தேங்காய் எண்ணெயின் உள்நாட்டு நுகர்வு 4.35 இலட்சம் டன்களாகவும் மற்றும் கொப்பரையின் நுகர்வு 7.1 இலட்சம் டன்களாகவும் இருந்துள்ளது. 2015 -16 ஆம் ஆண்டில் தேங்காயின் உள்நாட்டு விலை குறைந்ததால் கடந்த நிதியாண்டைவிட இவ்வாண்டில் தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்களின் ஏற்றுமதி 10.50 சதவிகிதம் உயர்ந்து ரூ.1,450 கோடிக்கு விற்பனையாகியுள்ளது. இந்தியாவின் தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்கள் ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், குவைத் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் தேங்காய் உற்பத்தி சாதாரண நிலையைவிட அதிகமாக உள்ளது. ஆனால் கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசத்தில் வறட்சியின் காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து வரும் கொப்பரையின் வரத்து சென்ற வருடத்தைவிட குறைவாகவே உள்ளது. மைசூரிலிருந்து வரத்து ஜீன் மாதம் முதல் ஆரம்பிக்கலாம். வட இந்தியாவில் தேங்காய்க்கு தேவை உள்ளதால் வருங்காலத்திலும் தேங்காய் விலை நிலையாக இருக்கும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 14 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலையை, தமிழ்நாடு வேளாண்மை

பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான தேங்காயின் விலை மே - ஜீன், 2016 மாதங்களில் ரூ.8 -9 இருக்கும் எனவும், கொப்பரையின் விலை கிலோவிற்கு ரூ.52-54 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி தேங்காய் மற்றும் கொப்பரை விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**</u>


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி :- 0422-2431405


<u>**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**</u>


பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி எண் :- 0422-6611284